©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 187] CHENNAI, FRIDAY, JUNE 25, 2010
Aani 11, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர், வேலூர்.**

**வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், சேங்குன்றம் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

(*ந.க. அ4/4207/2008.*)

**No. VI(2)/267(b-1)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சேங்குன்றம் ஊராட்சி மன்றத்தலைவர், திருமதி டி. பாக்கியலட்சுமி என்பவர் தமது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி ஊராட்சிக்கு தொடர்பில்லாத நபர்களால் குறிப்பாக ஊராட்சி மன்றத் தலைவரின் கணவருக்கு காசோலை அளித்து காசாக்கியது, தீர்மானம் பெறாமல் செலவினம் மெற்கொண்டது மற்றும் முறையாக நிர்வாகம் செய்யாமலும் தன்னிச்சையாக அரசின் பணத்தை செலவிட்டு வீணடித்தது தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத்தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தின் அடிப்படையில் ஊராட்சி மன்றத்தலைவரின் இறுதி விளக்கம் பெறப்பட்டதையும் பரிசீலனை செய்து, உளத்தேர்வின்படி சேங்குன்றம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி டி. பாக்கியலட்சுமி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 262(1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**வேலூர் மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், மோசூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ3/3543/2008.)*

**No. VI(2)/267(b-2)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்,நீ 1994, பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, வேலூர் மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மோசூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி எம். விஜயலட்சுமி என்பவர் தமது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசு விதிமுறைகளை பின்பற்றாமல் இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட தொகுப்பு வீடுகளை சொந்த வீட்டுமனை பட்டா இல்லாத நபர்களுக்கு ஒதுக்கீடு செய்தது, அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பயனாளிக்கு தொகை வழங்கியதாக போலி ஆவணங்கள் தயாரித்து ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியது தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத்தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தின் அடிப்படையில் ஊராட்சி மன்றத்தலைவரின் இறுதி விளக்கம் பெறப்பட்டதையும் பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி மோசூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி எம். விஜயலட்சுமி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

வேலூர்,
**2010 ஜூன் 21.**

**செ. ராஜேந்திரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU